1967 ஜூலை 7]

ஏலகிரி மலையின்மீது சாலை

* 200 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன்: மதிப்பிற்குரிய பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வடார்க்காடு மாவட்டம், ஏலகிரி மலையின் மீது போடப்பட்ட ரோட்டுக்காகச் செலவு செய்யப்பட்ட தொகை என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சாலை அமைக்க ரூ. 18,43,349 செலவு செய்யப்பட்டது.

திரு. வி. கே. கோதண்டராமன்: இந்த 19 லட்சம் ரூபாய் அளவுக்குச் செலவு செய்து ரோட்டைப் போடுவதற்கான காரணம் கோடைக்காலத்தில் ஓய்வுபெறுவதற்கான ஒரு ஸ்தலமாக அமைப்பதற்காகத்தான் என்று சொல்லப்படுவது உண்மையா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நான் பொறுப்பேற்றிருக்கிற துறையைப் பொறுத்தவரை சாலையைப் பற்றித்தான் சொல்ல முடியும். ஓய்வு பெறும் இடத்தைப்பற்றி வேறு துறை அமைச்சர் அவர்கள்தான் பதில் சொல்லவேண்டும்.

ஜீப் பஸ்

* 201 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: மதிப்பிற்குரிய பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிதம்பரம் தாலுகாவில் கொள்ளிடக் கரையில் கவரப்பட்டியிலிருந்து லோயர் அணைக்கட்டு வரையில் பொது மக்களின் சவுகரியத்தை முன்னிட்டு 'ஜீப் பஸ்' ஒன்று ஓட்டுவதற்கு அரசாங்கத்தில் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அத்தகைய திட்டம் ஏதும் தற்போது இல்லை.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: இல்லையென்றால் ஒரு பஸ்ஸாவது விடத் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அங்கு பாதை வசதி சரியாக இல்லையென்றும், சீர்படுத்த வேண்டுமென்றும் கோட்டப் பொறியாளருக்கு எழுதப்பட்டிருக்கிறது. அவரிடமிருந்து அறிக்கை வந்த பிறகு கவனிக்கப்படும்.

Small-pox in City.

* 202 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that small-pox is rampant in the City of Madras; and

(b) if so, the steps taken to prevent its spread?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

THIRU K. VINAYAKAM : While the Minister answers that there is no small-pox rampant in the City of Madras, is he aware of a press note issued by the Health Officer, Corporation of Madras last month as well as in the beginning of this month that small-pox is in a rampant condition and is spreading taking a lot of victims in the City of Madras?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The Director of Public Health has reported that small-pox is not rampant in the City of Madras. There was not a single attack of small-pox in the last six months. At present there is only a sporadic infection starting from January this year.

THIRU K. VINAYAKAM : May I know how many patients suffering from smallpox were admitted in the Infectious Diseases Hospital?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The hon. Member may put a separate question.

காலரா

*203 வின.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மதிப்பிர்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1966–67-ல் தென்னார்க்காடு ஜில்லாவில் காலரா நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களுள், இறந்து போனவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) 363 நபர்கள்.

(இ) 137 நபர்கள்.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : இதை தாலூகாவாரியாகக் கூற முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தாலூகாவாரியாக இல்லை. தென் ஆர்க்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் விவரம் கொடுத்திருக்கிறேன்.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : இந்தக் காலரா நோய் பரவக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பல காரணங்கள் உண்டு.